வணக்கம்
ஆகாஷ்வாணி – புதுச்சேரி
மாநிலச் செய்திகள்
வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 13-09-2026 – ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள் :

புதுடெல்லி பாரத் மண்டபத்தில், 18ஆவது பிரிக்ஸ் உச்சி மாநாடு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில், நேற்று தொடங்கியது.

பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்க வந்த சீன அதிபரை பிரதமர் திரு. நரேந்திர மோடி சந்தித்து, இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு வார்த்ததை நடத்தினார்.

விநாயகர் சதுர்த்தி விழா நாளை கொண்டாடப்படுவதையொட்டி, முக்கிய தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

புதுச்சேரி கடற்கரைச் சாலையில், பசுமை மற்றும் சுற்றுச்சூழலை காக்கும் வகையில், விழிப்புணர்வு மராத்தான் போட்டியை, துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் இன்று காலை தொடக்கி வைத்தார்.

பிரிக்ஸ் மாநாடு -1 (18)

18ஆவது பிரிக்ஸ் உச்சி மாநாடு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில், புதுடெல்லி பாரத் மண்டபத்தில், நேற்று தொடங்கியது. இந்த மாநாட்டில், ரஷ்ய அதிபர், சீன அதிபர், ஈரான் அதிபர், மற்றும், மலேசியா, அபுதாபி உள்ளிட்ட நாடுகளின் அதிபர்கள் பங்கேற்றனர். இந்த மாநாட்டை தொடக்கி வைத்து உரையாற்றிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, உலகத் தலைவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இந்த மாநாடு ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மைல் கல் என்றும் பிரதமர் குறிப்பிட்டார். பிரிக்ஸ் அமைப்பு யாருக்கும் எதிரானது அல்ல என்றும், அது ஒரு புதிய அடையாளத்தை பெற்றுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். மக்கள் நலனே நமக்கு முக்கியம் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

கடல்சார் பணியாளர்களுக்கான அவசர கால ஆதரவு வலையமைப்பு ஒன்றை உருவாக்குவது அவசியம் என்றும் பிரதமர் தெரிவித்தார். உலகளவில் மாற்றங்களை கொண்டுவர பிரிக்ஸ் நாடுகள் இணைந்து செயல்பட வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார். இது குறித்து கூடுதல் தகவல்கள்…

(வாய்ஸ்)

பிரிக்ஸ் மாநாடு - 2 (18)

(வாய்ஸ்)

எல்லைத் தாண்டிய பயங்கரவாதத்தை முறியடிக்க கூட்டு நடவடிக்கை தேவை என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். பிரிக்ஸ் நாடுகளின் உச்சி மாநாட்டின் முதல் நாளான நேற்று, டெல்லி பிரகடனம் வெளியிடப்பட்டது. இதில், உலகளாவிய வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பிற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. பிரிக்ஸ் நாடுகளிடையே பண பரிவர்த்தனைகளை எளிதாக்குவது உள்ளிட்ட அம்சங்களும் இந்த பிரகடனத்தில் இடம் பெற்றுள்ளன. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவும் – பிரேசிலும் நிரந்தர உறுப்பினராக இடம் பெறுவதற்கு சீனா ஆதரவு அளித்தது என டெல்லி பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் போது ஏற்றுக் கொள்ளப்பட்ட, புதுடெல்லி பிரகடனத்தை, உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநரும் பாராட்டி உள்ளார். உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் இது தொடர்பாக தமது சமூக ஊடகப் பதிவில் அனைவருக்கும் சுகாதார பாதுகாப்பு வழங்குவதற்காக அர்ப்பணிப்பு, மீள்திறன் கொண்ட சுகாதார அமைப்புகள் மற்றும் பெருந்தொற்று ஒப்பந்தத்தின் நோய்க்கிருமி அணுகல் மற்றும் பலன் பகிர்வு இணைப்பு குறித்த பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிந்ததற்கு அவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

பிரதமர் – சீன அதிபர் (16)

பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்க வந்த சீன அதிபரை பிரதமர் திரு. நரேந்திர மோடி சந்தித்து, இருதரப்பு உறவு குறித்து பேச்சு வார்த்தை நடத்தினார். இந்த சந்திப்பின் போது, இரு நாட்டு தலைவர்களும், சர்வதேச விவகாரம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து, முக்கிய ஆலோசனை

நடத்தினார். கருத்து வேறுபாடுகள், பரஸ்பர மரியாதை மற்றும் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என இரு நாட்டு தலைவர்களும் வலியுறுத்தினர். இருதரப்பு உறவுகளின் முன்னேற்றத்திற்கு, எல்லைப் புறங்களில் அமைதியும், சமாதானமும் நிலவ வேண்டும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார். எல்லைத் தொடர்பான விஷயங்களில் ஏற்கனவே அளிக்கப்பட்ட உறுதிமொழியை இரு தரப்பினரும் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். பிராந்திய மற்றும் உலகளாவிய சவால்களை சமாளிக்க பொதுவான கருத்தை பின்பற்ற இரு நாட்டு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர். பிரிக்ஸ் உச்சி மாநாட்டிற்கு சீனா அளித்துள்ள ஆதரவை, பிரதமர் திரு. நரேந்திர மோடி வெகுவாக பாராட்டி உள்ளார்.

### அமித் ஷா (12)

சுதந்திர போராட்ட வீரர் ஜதீந்திரநாத் தாஸின் நினைவு தினத்தை முன்னிட்டு, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று அவருக்கு அஞ்சலி செலுத்தினார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள சமூக ஊடகப் பதிவில், இளம் வயதிலேயே ஜதீந்திரநாத் தாஸ் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான போராட்டப் பாதையை தேர்ந்தெடுத்து உள்ளதாகத் தெரிவித்தார். சிறையின் சித்ரவதைகள் அவரது உறுதியை அசைக்க முடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார். சிறையில் உள்ள சுதந்திரப் போராட்ட வீரர்கள் மீதான மனிதாபிமானமற்ற நடத்தையை கண்டித்து, அவர் மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டம் தேசபக்திக்கும், அசைக்க முடியாத தைரியத்திற்கும் ஒரு எடுத்துக் காட்டாக திகழ்கிறது என்றும் அவரது தியாகம் நாட்டு மக்களுக்கு தேச சேவை செய்ய உத்வேகம் அளிக்கும் என்றும், திரு. அமித் ஷா தெரிவித்தார்.

### ராஜ்நாத் சிங் (14)

பயங்கரவாதம், தீவிரவாதம், ஆகியவற்றிற்கு எதிரான சமரசத்திற்கு இடமில்லாத உறுதியான நடவடிக்கைகளை இந்தியா எதிர்கொண்டுள்ளதாக, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில், நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தேசிய ஒருமைப்பாட்டையும், மக்களையும், பாதுகாப்பதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி அரசு முன்னுரிமை அளித்து வருவதாகத் தெரிவித்தார். பயங்கரவாதிகளின் புகலிடங்களை இந்திய ராணுவம் அழித்ததைச் சுட்டிக்காட்டிய அவர், பயங்கரவாதத்திற்கும் – தீவிரவாதத்திற்கும் எதிராக கடுமையான நடவடிக்கைகள்

எடுக்கப்பட்டதாக தெரிவித்தார். நக்சல் தீவிரவாதத்தில் இருந்து, இந்தியா விடுபட்டுள்ளதாக அவர் கூறினார். வறுமை பரவுவதற்கு நக்சல்களே காரணம் என்றும் அவர் கூறினார். சமூகத்தில் பிளவுகளை ஏற்படுத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகளை கண்டித்த அவர், பிரதமருக்கு எதிராக அவதூறுகளை கட்டமைக்க முயன்றவர்கள் தோல்வி அடைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

விநாயகர் சதுர்த்தி-1 (4)

விநாயகர் சதுர்த்தி விழா நாளை கொண்டாடப்படுவதையொட்டி, முக்கிய தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். விநாயகர் சதுர்த்தி விழாவை சுற்றுச் சூழலுக்கு ஏற்ற வகையில் கொண்டாட வேண்டும் என்ற விழிப்புணர்வு தற்போது அதிகரித்து வருகிறது. இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு...

(வாய்ஸ்)

விநாயகர் சதுர்த்தி -2 (17)

(வாய்ஸ்)

முழுமுதற் கடவுள் விநாயகர் சதுர்த்தி விழா நாளை கொண்டாடப்பட உள்ளது. விநாயகர் சிலையை வடிவமைப்பதில், இயற்கையான முறையை கடைபிடிக்க வேண்டும் என, பல்வேறு அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன. குறிப்பாக, பிளாஸ்டர் ஆஃப் பாரீஸ் மற்றும் ரசாயன வண்ணங்கள் பயன்படுத்தாமல், இயற்கையான களிமண்ணால் தயாரிக்கப்படும் விநாயகர் சிலைகள் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றன. மேலும், சிலைகளுக்கு மேல் தாவர விதைகளை வைத்து உருவாக்கப்படும் விதை விநாயகர் சிலைகள் வழிபாட்டுடன் சேர்த்து, இயற்கையை வளர்க்கும் முயற்சியாக பார்க்கப்படுகிறது.

பொதுவாக விநாயகர் சிலைகள் தயாரிக்கும்போது, பயன்படுத்தப்படும் சில ரசாயன வண்ணங்கள், மற்றும், பிளாஸ்டர் ஆஃப் பாரீஸ் ஆகியவை நீர்நிலைகளில் கரைவதற்கு அதிக காலம் எடுத்துக் கொள்வதுடன், நீரின் தரத்தையும் பாதிக்கிறது. குறிப்பாக நீர் நிலைகளில் சிலைகளை கரைக்கும்போது, அவற்றில் உள்ள ரசாயனப் பொருட்கள், நீரின் நிறம் போன்றவை, நீர்வாழ் உயிரினங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதற்கு மாற்றாக, இயற்கை களிமண்ணால் தயாரிக்கப்படும் சிலைகளை மக்கள் பயன்படுத்தலாம் என, சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

விநாயகர் சதுர்த்தி - 3 (6)

மண், தண்ணீர் மற்றும் இயற்கை நிறங்கள் போன்றவற்றை கொண்டு தயாரிக்கப்படும் சிலைகள் விநாயகர் சதுர்த்தி முடிந்த பின்னர், மீண்டும் மண்ணோடு கலந்து இயற்கை சூழலில் இணையக்கூடியவை ஆகும். எனவே, ரசாயன கலவைகள் இல்லாத தூய களிமண்ணால் செய்யப்பட்ட விநாயகர்கள் சிலைகளை மட்டுமே வழிபடவும், கரைக்கவும் அரசு அறிவுறுத்தி உள்ளது குறிப்பிடத்தக்கதாகும். புதுச்சேரி – மாரத்தான் (8)

புதுச்சேரி கடற்கரைச் சாலையில், ரோட்டரி சங்கம் சார்பில், பசுமை மற்றும் சுற்றுச்சூழலை காக்கும் வகையில், விழிப்புணர்வு மராத்தான் போட்டி, இன்று காலை நடைபெற்றது. போட்டியை, புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கொடியசைத்து தொடக்கி வைத்தார். இப்போட்டியில், பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த, மாணவர்கள், சிறுவர் – சிறுமியர், இளைஞர்கள் மாரத்தான் ஓட்டத்தில் கலந்து கொண்டனர். புதுச்சேரி கடற்கரைச் சாலையில் இருந்து, நகரப்பகுதியின் முக்கிய சாலை வழியாகச் சென்று, மீண்டும் கடற்கரைச் சாலையை வந்தடைந்தனர். இப்போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நேபாளம் (18)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேபாளத்திற்கு உதவும் வகையில், 70 மீட்டர் நீளமுள்ள பெய்லி பாலத்திற்கான இணைப்புப் பாலங்களின் முதல் தொகுதியை இந்தியா நேபாளத்திற்கு அனுப்பி உள்ளது. நேபாளத்திற்கான இந்தியத் தூதர் நவீன் ஸ்ரீவஸ்தவா தமது எக்ஸ்தளப் பதிவில், இணைப்புப் உதிரிப் பாகங்கள் நேற்று ஹேட்டௌடாவில் உள்ள நேபாளத்தின் சாலைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாகக் கூறினார். மேலும், வரும் நாட்களில் பாலத்தின் உதிரிப் பாகங்கள் அடங்கிய கூடுதல் சரக்கு வந்து சேரும் என்றும், அவர் தெரிவித்தார். அந்நாட்டில் ஏற்பட்டுள்ள திடீர் வெள்ளத்தைத் தொடர்ந்து, அந்நாட்டிற்கு இந்தியா வழங்கி வரும் தொடர்ச்சியான, மனிதாபிமான உதவிகளின் ஒரு பகுதியாக இந்த நிவாரணம் அமைந்துள்ளது.

வெளியுறவு அமைச்சகத்தின் அறிக்கையின் படி, நேபாளத்தில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக இந்தியா இதுவரை, தடயவியல் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்காக 130 டன்களுக்கும் அதிகமான நிவாரணப் பொருட்களை அனுப்பி உள்ளது. மேலும் 54 நிபுணர்களையும் பணியில் அமர்த்தி உள்ளது. சுரங்கப்பாதை மற்றும் மண் மீட்பிற்கான சிறப்பு உபகரணங்கள், மற்றும், DNA கருவிகள், தடயவியல் உபகரணங்கள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கி உள்ளது.

**மீண்டும் தலைப்புச் செய்திகள் :**

புதுடெல்லி பாரத் மண்டபத்தில், 18ஆவது பிரிக்ஸ் உச்சி மாநாடு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில், நேற்று தொடங்கியது.

பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்க வந்த சீன அதிபரை பிரதமர் திரு. நரேந்திர மோடி சந்தித்து, இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு வார்த்ததை நடத்தினார்.

விநாயகர் சதுர்த்தி விழா நாளை கொண்டாடப்படுவதையொட்டி, முக்கிய தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

புதுச்சேரி கடற்கரைச் சாலையில், பசுமை மற்றும் சுற்றுச்சூழலை காக்கும் வகையில், விழிப்புணர்வு மராத்தான் போட்டியை, துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் இன்று காலை தொடக்கி வைத்தார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RM / CN / RK**